# தூத்துக்குடி நகரமன்றம்

## சாதாரணக் கூட்டப்பொருள்

2007ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10. 00 மணிக்கு தூத்துக்குடி நகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ் பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது, சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

## பொருள்கள்

1. இந்நகராட்சிக்கு சொந்தமான TN 69–4707 வாகனம் வாங்கி 15 ஆண்டுகளுக்கு மேலாகவும், 2.70 இலட்சம் கி.மீ. தூரம் இயங்கி உள்ளதாலும் இதனை கழிவுநீக்கம் செய்யவும் ஒரு புதிய ஈப்பு வாகனம் ரூ 5.00 இலட்சம் மதிப்பில் வாங்கிக்கொள்ளவும் இம்மன்றம் தனது 31–8–06ம் தேதிய தீர்மான எண் 958ல் அனுமதி அளித்துள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் டி.ஜி.எஸ்.டி விலை விகிதத்தில் புதிய பொலிரோ ஈப்பு வாங்கிட தனது 14–12–2006ம் தேதிய செயல்முறைகள் கடிதம் எண் 69368/2006/P1–ல் ஒப்புதல் வழங்கி உள்ளார்கள். பொலிரோ ஈப்பு வண்டியின் தயாரிப்பு விற்பனை நிறுவனமான மெசர்ஸ் மகேந்திரா அண்டு மகேந்திராவில் இருந்துகீழ்க்கண்டவாறு விலைகள் பெறப்பட்டுள்ளது.

| பொலிரோ ஈப்பு ஏழு இருக்கைகள் டீசல் எஞ்சின் பொருத்தியது | டி.ஜி.எஸ்.டி விலை விகிதம் | | சிறப்பு அரசு விலை மகேந்திதிரா நிறுவனம், சென்னை | |
|---|---|---|---|---|
| | வாகன விலை | 4,04,970 | வாகன விலை | 4,22,770 |
| | வரி 12.5% | 50,621 | வரி 12.5% | 52,846 |
| | போக்குவரத்து | 8,000 | | ------- |
| | | ---------- | | 4,75,616 |
| | | 4,63,591 | போக்குவரத்து | 10 ,000 |
| | நுழைவு வரி 13% | 60,266 | | ------- |
| | | ---------- | | 4,85,616 |
| | | 5,23,858 | | --------- |
| | | ---------- | | |

மேலே உள்ள விலை விகிதத்தில் டி.ஜி.எஸ்.டி விலை விகிதத்தை விட மெசர்ஸ் மகேந்திரா மற்றும் மகேந்திரா நிறுவனம் சுமார் 38,242/–ஐ குறைவாக கொடுத்துள்ளது. எனவே குறைந்த விலை விகிதம் ரூ 4,85,616/– கொடுத்துள்ள மெசர்ஸ் மகேந்திரா அண்ட் மகேந்திரா சென்னையிலிருந்து நேரிடையாக வாங்கிக்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

டி.ஜி.எஸ்.டி விலையை விட குறைவாக விலைவிகிதம் கொடுத்துள்ள ஈப்பு வண்டி தயாரிப்பு நிறுவனமாக மெசர்ஸ் மகேந்திரா மகேந்திரா நிறுவனத்திலிருந்து சிறப்பு அரசு விலையான ரூ 4,85,616 நேரிடையாக வாஙகிக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

நகஎண் இ1. 014984/ 06

**தீர்மான எண் 21 நாள் 22–02–2007**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது**

2. தமிழ்நாடு அரசின் 12வது மாநில நிதிக்குழு பரிந்துரையின் கீழ் இந்நகராட்சிக்கு முதல் மற்றும் இரண்டாவது தவணைத்தொகையாக ரூ.83.42 இலட்சம் அனுமதிக்கப்பட்டு இதில் 25% தொகையாக ரூ 20.86 லட்சத்தினை சாலைகள், கல்வெட்டுகள் மற்றும் வடிகால் ஒடைகள் அமைக்கவும் அதனை செலவிட உத்திரவிடப்பட்டுள்ளது.

இதன்படி மேற்படி நிதியில் பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட பணிகள் தேர்வு செய்யப்பட்டு அதற்கான மதிப்பீடு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| <u>பணியின் பெயர்</u> | <u>மதிப்பீட்டுத்தொகை</u> |
|---|---|
| 1. கந்தசாமிபுரம் பிரதான சாலையில் தார்தளம் அமைத்தல் | ரூ 10.00 இலட்சம் |
| 2. தெற்கு காட்டன் ரோடு தார்தளம் அமைத்தல் | ரூ 5.00 இலட்சம் |
| 3. கிருஷ்ணராஜபுரம் 5வது தெருவில் தார்தளம் அமைத்தல் | ரூ 5. 00 இலட்சம் |
| 4. பூபாலராயர்புரம் 6வது தெரு தொடர்ச்சியில் (ரோசம்மாள் பள்ளி அருகில்) தார்தளம் அமைத்தல் | ரூ 6.85 இலட்சம் |

மேற்கண்டவாறு அனுமதிக்கப்பட்ட முதல் தவணைத்தொகை ரூ 10.43 இலட்சம் மற்றும் இரண்டாவது தவணைத்தொகை ரூ 10.43 லட்சம் திட்ட நிதியைத் தவிர்த்து ஏற்படும் கூடுதல் செலவினம் இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகவும் இப்பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழஙகிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம்அனுமதி அளிக்கலாம்.

இ1. 649/04–1

**தீர்மான எண் 22 நாள் 22–02–2007**
**அலுவலக குறிப்புப்படி அனுமதி அளிக்கப்பட்டது.**

3. தமிழ்நாடு அரசின் 12வது மாநில நிதிக்குழு பரிந்துரையின் கீழ் இந்நகராட்சிக்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் கடித எண் பி2. 66830/06 நாள் 27/1/2007ல் முதல் தவணையாக தொகை ரூ 4,17,104/– லட்சம் நிதி ஒதுக்கீடப்பட்டுள்ளது. மற்றும் இரண்டாவது தவணையாக ரூ 4,17,104/– நிதி ஒதுக்கீடு செய்யப்படும். எனவே கீழ்க்கண்ட இரண்டு தொகையும் சேர்த்து கீழ்க்கண்ட இனம் வாரியாக செலவிடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 50% நிதி திடக் கழிவு மேலாண்மைத்திட்ட பணிகளுக்காக | ...ரூ 41.74 இலட்சம் |
| 25% நிதி சாலை மற்றும் வடிகால் ஓடை கட்டுதல் பணிகளுக்காக | .. ரூ 20.84 இலட்சம் |
| 25% நிதி பல்வகை செலவுகள் மின் கட்டணம் போன்றவைக்கு | .. ரூ 20.84 இலட்சம் |

மேற்கண்டவாறு செலவினத்தில் நகராட்சியின் தெருவிளக்குகளுக்கு மின் கட்டணமாக மின்சார வாரியத்திற்கு அதிக அளவில் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளதால் இதில் குறிப்பிட்ட தொகையினை முதல் கட்டமாக விடுவிக்கப்பட ரூ 10.42 லட்சத்தினை தெருவிளக்கு மின் கட்டணமாக மின்சார வாரியத்திற்கு செலுத்தி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இரண்டாவது தொகை விடுவிக்கப்பட்டவுடன் மின்சார வாரிய கட்டணம் (நிலுவைத்தொகை) செலுத்துவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

இ1. 649/04–1

**தீர்மான எண் 23 நாள் 22–02–2007**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது**

4. இந்நகராட்சிக்கு தமிழ்நாடு அரசின் 12வது மாநில நிதிக்குழு பரிந்துரையின் கீழ் இந்நகராட்சிக்கு முதல் மற்றும் இரண்டாவது தவணைத்தொகையாக ரூ 83.42 இலட்சம் அனுமதிக்கப்பட்டு அவற்றில் 50% தொகையாக 41.71 லட்சத்தினை திடக் கழிவு மேலாண்மைத்திடடத்தின் கீழ் அதனை செலவிட உத்திரவிடப்பட்டுள்ளது.

இதன்படி மேற்படி நிதியில் பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட பணிகள் தேர்வு செய்யப்பட்டு அதற்கான மதிப்பீடு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) டம்பர் பிளேசர் | 1 எண்ணம் | 10.00 லட்சம் |
| 2Front and back loaded vehicle | 1 எண்ணம் | 20.00 லட்சம் |
| 3எடை இயந்திரம் (weighing machine) 20 M,T | 1 எண்ணம் | 8.00 லட்சம் |
| 4) டம்பர் பின்கள் | 8எண்ணஙகள் | 4.00 லட்சம் |

மேற்கண்டவாறு அனுமதிக்கப்பட்ட முதல் தவணை மற்றும் இரண்டாவது தவணைத்தொகை ரூ 41.71 இலட்சம் திட்ட நிதியைத் தவிர்த்து ஏற்படும் கூடுதல்

செலவினம் இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் இப்பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழஙகிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம்அனுமதிக்கலாம்.

இ1. 649/04–1

**தீர்மான எண் 24 நாள் 22–02–2007**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது**

5. பொன்விழா ஆண்டு நகர்புற வேலைவாய்ப்புத்திட்டத்தின் கீழ் சுய தொழில் வேலைவாய்ப்பு பயிற்சி வழஙக 2006–07ம் நிதியாண்டிற்கு மத்திய மற்றும் மாநில அரசு ரூ 2,05,000/– நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

அதில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பஙகளில் இருந்து 25 பயனாளிகள் தேர்வு செய்து இலகுரக வாகன ஒட்டுநர் பயிற்சி வழஙக கீழ்க்கண்ட பயிற்சி நிறுவனஙகளிலிருந்த விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

1. **<u>ஜெயா டிரைவிங ஸ்கூல் பாளையஙகோட்டை ரோடு, தூத்துக்குடி</u>**

பழகுநர் உரிமம் எடுத்து ஒட்டுநர் பயிற்சி அளித்து ஒட்டுநர் உரிமம் எடுத்து தருவதற்கு நபர் ஒன்றுக்கு ரூ 2100/– (ரூபாய் இரண்டாயிரத்து நூறு மட்டும்)

2. **<u>ஸ்ரீ சக்தி டிரைவிங ஸ்கூல் போல்பேட்டை, தூத்துக்குடி</u>**

பழகுநர் உரிமம் எடுத்து ஒட்டுநர் பயிற்சி அளித்து ஒட்டுநர் உரிமம் எடுத்து தருவதற்கு நபர் ஒன்றுக்கு ரூ 2000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)

3. **<u>வில்சன் டிரைவிங ஸ்கூல் , தூத்துக்குடி</u>**

பழகுநர் உரிமம் எடுத்து ஒட்டுநர் பயிற்சி அளித்து ஒட்டுநர் உரிமம் எடுத்து தருவதற்கு நபர் ஒன்றுக்கு ரூ 1800/– (ரூபாய் ஆயிரத்து எண்ணூறு மட்டும்)

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 3ல் கண்ட வில்சன் டிரைவிங ஸ்கூல், தூத்துக்குடி தருவித்துள்ள விலைப்புள்ளி தொகை ரூ 1800/– மற்ற இரண்டு விலைப் புள்ளிகளை விட குறைவாக உள்ளதால் , வில்சன் டிரைவிங ஸ்கூல் நிறுவனத்திற்கு பயிற்சிக்கான உத்திரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** அ) 25 பயனாளிகளுக்கு இலகுரக வாகன ஒட்டுநர் பயிற்சி வழஙகலாம்.

ஆ) வில்சன் டிரைவிங ஸ்கூல் நிறுவனம் தருவித்துள்ள குறைந்த விலைப்புள்ளித்தொகை ரூ 1800/–ஐ (ரூபாய் ஆயிரத்து எண்ணூறு மட்டும்) ஏற்றுக்கொண்டு பயிற்சிக்கான உத்திரவு அந்நிறுவனத்திற்கு வழஙகலாம்.

ஜி6. 2153/07

**தீர்மான எண் 25 நாள் 22–02–2007**

**அலுவலக குறிப்பு அ, ஆ அனுமதி வழங்கப்பட்டது**

**6.** பொன்விழா ஆண்டு நகர்புற வேலைவாய்ப்புத்திட்டத்தின் கீழ் சுய தொழில் வேலைவாய்ப்பு பயிற்சி வழங்க **2006–07**ம் நிதியாண்டிற்கு மத்திய மற்றும் மாநில அரசு ரூ **2,05,000/–** நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

அதில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களில் இருந்து 25 பயனாளிகள் தேர்வு செய்து நர்ஸிங பயிற்சி வழங்க கீழ்க்கண்ட பயிற்சி நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

1. <u>நேரு மகளிர் மன்றம், கால்டுவெல் காலனி தூத்துக்குடி</u>

நர்ஸிங பயிற்சி ஒரு நபருக்கு 3 மாத கால பயிற்சி
வழங்க கேட்டுள்ள தொகை ரூ 1975/– (ரூபாய் ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தைந்து மட்டும்)

2. <u>மலர் மகளிர் மன்றம், 133, ஆண்டாள் தெரு, தூத்துக்குடி</u>
நர்ஸிங பயிற்சி ஒரு நபருக்கு 3 மாத கால பயிற்சி
வழங்க கேட்டுள்ள தொகை ரூ 1950/– (ரூபாய் ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்)

3. <u>செந்தூர்மகளிர் நல சங்கம் , சேதுராஜாத் தெரு, தூத்துக்குடி</u>
நர்ஸிங பயிற்சி ஒரு நபருக்கு 3 மாத கால பயிற்சி வழங்க கேட்டுள்ள தொகை ரூ 1700/– (ரூபாய் ஆயிரத்து எழுநூறு மட்டும்

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 3ல் கண்ட செந்தூரம் மகளிர் நலச் சங்கம், தூத்துக்குடி தருவித்துள்ள விலைப்புள்ளி தொகை ரூ 1700/– மற்ற இரண்டு விலைப் புள்ளிகளை விட குறைவாக உள்ளதால் , செந்தூரம் மகளிர் நலச்சங்கம் நிறுவனத்திற்கு பயிற்சிக்கான உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** அ) 25 பயனாளிகளுக்கு நர்ஸிங பயிற்சி வழங்கலாம்.
ஆ) செந்தூரம் மகளிர் நலச்சங்கம், தருவித்துள்ள விலைப்புள்ளித்தொகை ரூ 1700/–ஐ (ரூபாய் ஆயிரத்து எழுநூறு மட்டும்) ஏற்றுக்கொண்டு பயிற்சிக்கான உத்திரவு அந்நிறுவனத்திற்கு வழங்கலாம்.

ஜி6. 2153/07

**தீர்மான எண் 26 நாள் 22–02–2007**
**அலுவலக குறிப்பு அ, ஆ அனுமதி வழங்கப்பட்டது.**

7. பொன்விழா ஆண்டு நகர்புற வேலைவாய்ப்புத்திட்டத்தின் கீழ் சுய தொழில் வேலைவாய்ப்பு பயிற்சி வழஙக 2006–07ம் நிதியாண்டிற்கு மத்திய மற்றும் மாநில அரசு ரூ 2,05,000/– நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

அதில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பஙகளில் இருந்து 26 பயனாளிகள் தேர்வு செய்து கணனி பயிற்சி வழஙக கீழ்க்கண்ட பயிற்சி நிறுவனஙகளிலிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

1. <u>விக்னேஷ் கம்யூட்டர் நிறுவனம், ராஜபாளையம்</u>

1) வழஙகப்படும் பயிற்சி . .டிசிஏ சாப்ட்வேர்
2) பயிற்சி காலம் .. 45 நாட்கள்
3) பயிற்சி வழஙக ஒரு மாணவருக்கு கோரியுள்ள கட்டணம் ரூ 2000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)

2. <u>நெட்பிளை சிஸ்டம்ஸ், சேரன்மகாதேவி</u>
1) வழஙகப்படும் பயிற்சி . .டிசிஏ சாப்ட்வேர்
2) பயிற்சி காலம் .. 60 நாட்கள்
3) பயிற்சி வழஙக ஒரு மாணவருக்கு கோரியுள்ள கட்டணம் ரூ 1900/– (ரூபாய் ஆயிரத்து தொள்ளாயிரம் மட்டும்)

3. <u>திருவருள் இண்டஸ்டீரியல் டிரைவிங சென்டர், சேரன்மகாதேவி</u>
1) வழஙகப்படும் பயிற்சி . .டிசிஏ சாப்ட்வேர்
2) பயிற்சி காலம் .. 60நாட்கள்
3) பயிற்சி வழஙக ஒரு மாணவருக்கு கோரியுள்ள கட்டணம் ரூ 1700/– (ரூபாய் ஆயிரத்து எழுநூறு மட்டும்)

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 3ல் கண்ட திருவருள் தொழிற்பயிற்சி மையம், தருவித்துள்ள விலைப்புள்ளி தொகை ரூ 1700/– மற்ற இரண்டு விலைப் புள்ளிகளை விட குறைவாக உள்ளதால் , திருவருள் தொழிற்பயிற்சி மைய நிறுவனத்திற்கு பயிற்சிக்கான உத்திரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** அ) 26 பயனாளிகளுக்கு கணனி பயிற்சி வழஙகலாம்.

ஆ) திருவருள் தொழிற்பயிற்சி மையம் தருவித்துள்ள குறைந்த விலைப்புள்ளித்தொகை ரூ 1700/–ஐ (ரூபாய் ஆயிரத்து எழுநூறு மட்டும்) ஏற்றுக்கொண்டு பயிற்சிக்கான உத்திரவு அந்நிறுவனத்திற்கு வழஙகலாம்.

ஜி6. 2153/07

**தீர்மான எண் 27 நாள் 22–02–2007**

**அலுவலக குறிப்பு அ, இ  அனுமதி வழஙகப்பட்டது.**

8. பொன்விழா ஆண்டு நகர்புற வேலைவாய்ப்புத்திட்டத்தின் கீழ் சுய தொழில் வேலைவாய்ப்பு பயிற்சி வழஙக 2006–07ம் நிதியாண்டிற்கு மத்திய மற்றும் மாநில அரசு ரூ 2,05,000/– நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

அதில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பஙகளில் இருந்து 26 பயனாளிகள் தேர்வு செய்து  தையல் பயிற்சி வழஙக கீழ்க்கண்ட பயிற்சி நிறுவனஙகளிலிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

1. <u>தபிதா மகளிர் மன்றம்,   தூத்துக்குடி</u>

தையல் கலை பயிற்சி  ஒரு  நபருக்கு 3 மாத கால பயிற்சி
வழஙக கேட்டுள்ள தொகை  ரூ 2250/– (ரூபாய்  இரண்டு ஆயிரத்து இருநூற்று  ஐம்பது மட்டும்)

2. <u>லேடிஸ் தையல் பள்ளி, தூத்துக்குடி</u>
தையல் கலை பயிற்சி  ஒரு  நபருக்கு 3 மாத கால பயிற்சி
வழஙக கேட்டுள்ள தொகை  ரூ 1950/– (ரூபாய் ஆயிரத்து தொள்ளாயிரத்து  ஐம்பது மட்டும்)

3. <u>சக்கினா தையல்பயிற்சி பள்ளி,  தூத்துக்குடி</u>
தையல் கலை பயிற்சி  ஒரு  நபருக்கு 3 மாத கால பயிற்சி
வழஙக கேட்டுள்ள தொகை  ரூ 1500/– (ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு  மட்டும்)

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 3ல் கண்ட சக்கினா தையல்பயிற்சி பள்ளி  தருவித்துள்ள விலைப்புள்ளி தொகை ரூ 1500/– மற்ற இரண்டு விலைப் புள்ளிகளை விட குறைவாக உள்ளதால் , சக்கினா தையல்பயிற்சி பள்ளி நிறுவனத்திற்கு பயிற்சிக்கான உத்திரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** அ) 26 பயனாளிகளுக்கு தையல் பயிற்சி  வழஙகலாம்.

ஆ) சக்கினா தையல்பயிற்சி பள்ளி நிறுவனம் தருவித்துள்ள குறைந்த விலைப்புள்ளித்தொகை ரூ 1500/–ஐ (ரூபாய்  ஆயிரத்து ஐந்நூறு  மட்டும்) ஏற்றுக்கொண்டு பயிற்சிக்கான உத்திரவு அந்நிறுவனத்திற்கு வழஙகலாம்.

ஜி6. 2153/07

**தீர்மான எண் 28 நாள் 28–02–2007**
**அலுவலக குறிப்பு அ, ஆ  அனுமதி வழஙகப்பட்டது.**

9. இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள திரேஸ்புரம் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படும் பகிர்மானக் குழாய்கள் பக்கிள் ஓடையின் குறுக்கே செல்கிறது. எனவே சில நேரஙகளில் குடிநீர் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு சாக்கடை நீர் குடிநீருடன் கலந்து நோய் ஏற்படும் அபாய நிலை உள்ளது. எனவே மேற்கண்ட குடிநீர் பகிர்மானக் குழாயினை மாற்றி பாலத்தில் மேல் பகுதியில் அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ 3,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் முடிவு செய்யலாம்.

மபஎண் 125/2006-07

**தீர்மான எண் 29 நாள் 22-02-2007**
**அலுவலக குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது.**

10. C.S.I தூத்துக்குடி நாசரேத் டயோசீசை சேர்ந்த நிர்வாகி அவர்களின் 29.11.2006ம் தேதிய கடிதத்தில் கோவில் தெரு கதவு எண் 94ல் கட்டிடத்தில் இயஙகி வரும் T.D.T.A நடுநிலைப் பள்ளிக்கு மின் இணைப்பு பெறுவதற்கு தடையில்லா சான்று அளிக்க கோரியுள்ளார்.

மேலும் உதவி தொடக்கக் கல்வி அலுவலர் அவர்களின் சான்று இதழில் மேற்படி நடுநிலைப் பள்ளி வடக்கூர் தூத்துக்குடி பள்ளி என அரசு அஙகீகாரம் பெற்றது என சான்று அளித்துள்ளார்கள்.

தமிழ்நாடு அரசிதழின்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் விதி எண் 83ன் 42வது திருத்தத்தின்படி கல்வி நிறுவனஙகள் இயஙகி வரும் கட்டிடஙகளுக்கு சொத்துவரி செலுத்தியதிலிருந்து விலக்கு அளிக்கலாம் என நகராட்சி நிர்வாக ஆணையரின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பேரில் வார்டு எண் 24ல் உள்ள கோவில் தெரு கதவு எண் 94ல் இயஙகி வரும் கட்டிடத்திற்கு சொத்துவரி செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்க மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

தமிழ்நாடு அரசிதழின்படி தமிழ்நாடு நகராட்சி சட்டம்விதி எண் 83ன் 42வது திருத்தத்தின்படி கல்வி நிறுவனஙகள் இயஙகி வரும் கட்டிடஙகளுக்கு சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கலாம் என நகராட்சி நிர்வாக ஆணையரின் சுற்றறிக்கையில் கருத்து தெரிவித்துள்ளதின் அடிப்படையில் சொத்துவரி செலுத்துவதிலிருந்து விதிவிலக்கு அளிக்கலாம். வரி விலக்கு வழஙகிய பின்னர் தடையில்லா சான்று வழஙகலாம். மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

அ4. 22797/2006

**தீர்மான எண் 20 நாள் 22–02–2007**
**அலுவலக குறிப்புப்படி அனுமதி அளிக்கப்பட்டது**

11. இந்நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கந்தன் காலனி 2ம் தெரு சந்து சிமெண்டு தளம் அமைக்கும் பணிக்கு 24.1.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு எஸ். சுதர்சன் | மதிப்பீட்டிற்கு 0.07 % குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு 0.43% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

**அலுவலகக் குறிப்பு**

1. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண் அ2. 5657/06 நாள் 26–12–2006ல் ரூபாய் 3.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.07% குறைவானதுமான திரு எஸ். சுதர்சன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 138/2006–07

**தீர்மான எண் 31 நாள் 22–02–2007**
**அலுவலக குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது**

12. இந்நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரகுமதுல்லாபுரம் கிழக்கு பக்க சாலையில் சிமெண்டு தளம் அமைக்கும் பணிக்கு 24.1.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு எஸ். சுதர்சன் | மதிப்பீட்டிற்கு 0.10 % குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு 0.38% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

**அலுவலகக் குறிப்பு**

1. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண் அ2. 5657/06 நாள் 26–12–2006ல் ரூபாய் 3.40 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி

வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.10% குறைவானதுமான திரு எஸ். சுதர்சன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 140/2006–07

**தீர்மான எண் 32 நாள் 22–02–2007**
**அலுவலக குறிப்பு1,2 ஒப்புக்கொள்ளப்பட்டது**

13. இந்நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ஆர்.வி,புரம் உள்ளே உள்ள தெருவில் சிமெண்டு தளம் அமைக்கும் பணிக்கு 24.1.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு சாந்தினி கன்ஸ்ரக்ஷன் | மதிப்பீட்டிற்கு 0.13 % குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு 0.09% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண் அ2. 5657/06 நாள் 26–12–2006ல் ரூபாய் 3.90 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.13% குறைவானதுமான திரு சாந்தினி கன்ஸ்ரக்ஷன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 137/2006–07

**தீர்மான எண் 33 நாள் 22–02–2007**
**அலுவலக குறிப்பு1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது**

14. இந்நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் போல்பேட்டை முத்தாரம்மன் கோவில் தெரு சிமெண்டு தளம் அமைக்கும் பணிக்கு 24.1.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு எஸ். சுதர்சன் | மதிப்பீட்டிற்கு 0. 11 % குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு 0.40% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண் அ2. 5657/06 நாள் 26–12–2006ல் ரூபாய் 2.20 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.11% குறைவானதுமான திரு எஸ். சுதர்சன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 138/2006–07

**தீர்மான எண் 34நாள் 22–02–2007**
**அலுவலக குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது**

15. இந்நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் அழகேசபுரம் தெருவில் சிமெண்டு தளம் அமைக்கும் பணிக்கு 24.1.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு எஸ். சுதர்சன் | மதிப்பீட்டிற்கு 0.11 % குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு 0.53% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண் அ2. 5657/06 நாள் 26–12–2006ல் ரூபாய் 3.40 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.11% குறைவானதுமான திரு எஸ்.சுதர்சன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 136/2006–07

**தீர்மான எண் 35 நாள் 22–02–2007**
**அலுவலக குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது**

**16.** இந்நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ஸ்டேட் பாங்க் காலனி (வாசுகி உப்பு ஆபீஸ் அருகில்)தார் தளம் அமைக்கும் பணிக்கு 24.1.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு மோகன்ராஜ் என்ற சதா | மதிப்பீட்டிற்கு 0. 58% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு 0.64% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண் அ2. 5657/06 நாள் 26–12–2006ல் ரூபாய் 4.70 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழஙகியுள்ளது
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.64% குறைவானதுமான திரு எஸ். ரம்போலா என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 143/2006–07

**தீர்மான எண் 36 நாள் 22–02–2007**
**அலுவலக குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது**

**17.** இந்நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் சக்தி விநாயகர்புரம் 5வது தெரு கிழக்கில் தார்தளம் அமைக்கும் பணிக்கு 24.1.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு எஸ். சுதர்சன் | மதிப்பீட்டிற்கு 0.68% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு 1.43% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண் அ2. 5657/06 நாள் 26–12–2006ல் ரூபாய் 315000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.68% குறைவானதுமான திரு எஸ்.சுதர்சன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 144/2006–07

**தீர்மான எண் 37 நாள் 22–02–2007**
**அலுவலக குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது**

**18.** இந்நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் லையன்ஸ் டவுண் முதல் தெரு (அரசன் மில் ரோடு) தார் தளம் அமைக்கும் பணிக்கு 24.1.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு ஐ. ஜெயசீலன் | மதிப்பீட்டிற்கு 0. 42% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு ஜி. பார்த்தீபன் | மதிப்பீட்டிற்கு 0.76% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண் அ2. 5657/06 நாள் 26–12–2006ல் ரூபாய் 500000க்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.76% குறைவானதுமான திரு ஜி. பார்த்தீபன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 147/2006–07

**தீர்மான எண் 38 நாள் 22–02–2007**
**அலுவலக குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது**

**19.** இந்நகராட்சி சட்டமன்ற உறுப்பினா் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ஜெயலானி காலனியில் தார்தளம் அமைக்கும் பணிக்கு 24.1.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு ஐ. ஜெயசீலன் | மதிப்பீட்டிற்கு 0.27 % குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு எஸ். இன்னாசிமுத்து | மதிப்பீட்டிற்கு 0.37% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண் அ2. 5657/06 நாள் 26–12–2006ல் ரூபாய் 340000/–க்கு நிர்வாக அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 27% குறைவானதுமான திரு ஐ. ஜெயசீலன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 145/2006–07

**தீர்மான எண் 39 நாள் 22–02–2007**
**அலுவலக குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது**

**20.** இந்நகராட்சி சட்டமன்ற உறுப்பினா் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் டீஎம்பி காலனியில் மழைநீர் வாறுகால் அமைக்கும் பணிக்கு 24.1.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு எஸ். சுதர்சன் | மதிப்பீட்டிற்கு 0. 99% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு 0. 29% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண் அ2. 5657/06 நாள் 26–12–2006ல் ரூபாய் 500000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 29% குறைவானதுமான திரு எஸ். ரம்போலா என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 146/2006–07

**தீர்மான எண் 40 நாள் 22–02–2007**
**அலுவலக குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது**

21. இந்நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் செயின்ட் ஜான் தெருவில் சிமெண்டு தளம் அமைக்கும் பணிக்கு 24.1.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு எஸ். சுதர்சன் | மதிப்பீட்டிற்கு 0.15 % குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு 0.31% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண் அ2. 5657/06 நாள் 26–12–2006ல் ரூபாய் 3.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.15% குறைவானதுமான திரு எஸ்.சுதர்சன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 148/2006–07

**தீர்மான எண் 41 நாள் 22–02–2007**
**அலுவலக குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது**

22. இந்நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் பிரையண்ட் நகர் 1வது தெரு தார் தளம் அமைக்கும் பணிக்கு 24.1.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு எஸ். சுதர்சன் | மதிப்பீட்டிற்கு 1. 10% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு 1.49% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண் அ2. 5657/06 நாள் 26–12–2006ல் ரூபாய் 7.75 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 1.10% குறைவானதுமான திரு எஸ். சுதர்சன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 142/2006–07

**தீர்மான எண் 42 நாள் 22–02–2007**
**அலுவலக குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது**

23. இந்நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் அம்மன் கோவில் தெருவில் சிமெண்டு தளம் அமைக்கும் பணிக்கு 24.1.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு கே.வி. மாரியப்பன் | மதிப்பீட்டிற்கு 0.26% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு மோகன்(எ) சதா | மதிப்பீட்டிற்கு 0.76% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண் அ2. 5657/06 நாள் 26–12–2006ல் ரூபாய் 3.20 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.26% குறைவானதுமான திரு கே.வி. மாரியப்பன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 141/2006–07

**தீர்மான எண் 43 நாள் 22–02–2007**
**அலுவலக குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது**

24. இந்நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் பத்திரகாளியம்மன் கோவில் தெரு ஸ்டார் பள்ளி அருகில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணிக்கு 24.1.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு எஸ். சுதர்சன் | மதிப்பீட்டிற்கு 0. 12% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு 0.34% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண் அ2. 5657/06 நாள் 26–12–2006ல் ரூபாய் 1.25 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழஙகியுள்ளது

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.12% குறைவானதுமான திரு எஸ். சுதர்சன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 139/2006–07

**தீர்மான எண் 44 நாள் 22–02–2007**
**அலுவலக குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது**

25. இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனஙகளுக்கு தேவையான டயர்டியூப்கள் வாஙக விலைப்புள்ளிகள் 24–1–2007ல் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விலை விபரப்படி கீழ்க்கண்ட நிறுவனஙகளில் இருந்து வரப்பெற்றுள்ளது. இவைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

1) எம்ஆர்எப் லிமிடெட் (தயாரிப்பு நிறுவனம்)
110இ/20 நார்த் பை பாஸ் ரோடு
வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி

| | |
|---|---|
| 9.00 x 20 டயர், டியூப், பிளாப் வரிகள் உட்பட | 8,972.14 |
| 6.00 x 16 டயர், டியூப், வரிகள் உட்பட | 1,964.07 |
| 7.50 x 16 டயர், டியூப், பிளாப் வரிகள் உட்பட | 4,540.20 |
| 12. 4 x 28 டயர், டியூப், வரிகள் உட்பட | 9,759.48 |

2.)மாலை சூடி டயர்ஸ்
6எப், ஜெயராஜ் ரோடு, தூத்துக்குடி

| | |
|---|---|
| 9.00 x 20 டயர், டியூப், பிளாப் வரிகள் உட்பட | 10,463 |
| 6.00 x 16 " | 2,334 |
| 7.50 x 16 " | 5,569 |
| 12. 4 x 28 " | 10,013 |

3) எம்விஎஸ் முத்துவேல் அன்ட் சன்ஸ்
61 சௌத் ராஜா தெரு, தூத்துக்குடி

| | |
|---|---|
| 9.00 x 20 டயர், டியூப், பிளாப் வரிகள் உட்பட | 10,800 |
| 6.00 x 16 டயர், டியூப் வரிகள் உட்பட | 2,150 |
| 7.50 x 16 " | 4,900 |
| 12. 4 x 28 " | 9,800 |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) வாகனஙகளுக்கான டயர்கள் வாஙகி மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆகி விட்டபடியால் தேய்மானத்தின் காரணமாக புதிய டயர்கள் ரூ 3,90,000/-க்கு வாஙகி பயன்படுத்திக்கொள்ள மன்றம் தனது தீர்மான எண் 799 நாள் 30-6-2006ல் அனுமதி அளித்துள்ளது.
2) குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள எம் ஆர்எப் தயாரிப்பு நிறுவனம் திருநெல்வேலியை ஏற்று அனுமதிக்கலாம்.

நகஎண் இ1. 07199/06

**தீர்மான எண் 45 நாள் 22-02-2007**
**அலுவலக குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது**

26. இந்நகராட்சிக்கு சொந்தமான TN69D- 9587 டிராக்டர் டிரைவர் வாகனம் தகுதிச் சான்று காலம் முடிவடைவதால் தேவையான பழுதுநீக்கப் பணிகள் செய்து வட்டார

போக்குவரத்து அலுவலகத்தில் மீண்டும் தகுதிச் சான்று பெற வேண்டும். இதற்கான செலவினத்திற்கும், அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளி கோரவும் மன்றம் தனது தீர்மானம் எண் 672 நாள் 22.5.06ல் அனுமதி அளித்ததின் பேரில் 5.2.2007ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

1. மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் இஞ்சினியரிங ஒர்க்ஸ் போல்பேட்டை, தூத்துக்குடி ரூ36,840/–
2. மெசர்ஸ் ஆர்என்ஆர்மெக்கானிக்கல் ஒர்க்ஸ், சிதம்பரநகர் தூத்துக்குடி ரூ 32,600/–
3. மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஜ் கிளாட்வெல் காலனி தூத்துக்குடி ரூ 36,330/–

## <u>அலுவலகக் குறிப்பு</u>

வாகனம் இயக்க தகுதிச் சான்று அவசியம் என்பதால் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் ஆர்என்ஆர் மெக்கானிக்கல் ஒர்க்ஸ் நிறுவனத்தினரை ஏற்று அனுமதிக்கலாம்.

நகஎண் 020124/06/இ1

**தீர்மான எண் 46 நாள் 22–02–2007**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது**

27. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள பொன்னகரம் தெருவில் குறுக்கே சிறுபாலம் உடைந்து போய் உள்ளது. அதனை சீர் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 35000/– (ரூபாய் முப்பத்தைந்தாயிரம் மட்டும்) இந்நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

